

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் மணமேல்குடி தெற்கு ஒன்றியம் கோட்டைப்பட்டினத்தில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கனிம வளத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர் தஞ்சை கலைமணி பாரதி சாதனை விளக்க உரையாற்றினார். உடன் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணி கார்த்திகேயன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சீனியர், பொன்.கணேசன், அறந்தாங்கி நகர செயலாளர் க.இராஜேந்திரன், ஹரி.விமலாதிராஜன், நா.நசுருதீன், மு.முகமது யூனஸ் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், பாக முகவர்கள், பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

### "நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு"

# திருவாரூர் மாவட்டத்தில் ஐந்தாம் கட்ட பொதுக்கூட்டங்கள்!

## அரசின் சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்த்த கழகத்தினர்!

திருவாரூர், மே 14 -

திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படியும் தலைமைக்கழக அறிவிப்பின் படியும், "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" ஐந்தாம் கட்ட பொதுக்கூட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் எழுச்சியோடு நடைபெற்றது.

கழக அரசின் சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களுக்கு கொண்டு சேர்க்கும்விதமாக தலைமைக் கழக பேச்சாளர்கள், இளம் பேச்சாளர்கள், கழக நிர்வாகிகள் என அனைவரும் சிறப்போடு செயல்பட்டு சாதனைகளை எடுத்துக்கூறி தலைமைக்கழகத்தின் நோக்கத்தை தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோரின் ஆலோசனைகளின் படியும் நிறைவேற்றி சிறப்பித்தனர்.

குறிப்பாக திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அழகிய வடிவமைப்பில், வண்ணமயமாக அச்சிடப்பட்ட கழக அரசின் சாதனைகளின் தொகுப்பு புத்தகம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. சாதனை விளக்கக் கூட்டங்களின் விளைவால் பொதுக்கூட்ட மேடைகளிலேயே மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணைந்தது அதனை உறுதிப்படுத்தியதாக அமைந்தது.

ஐந்தாம் கட்ட கூட்டங்களில் திருத்துறைப் பூண்டி நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் திருத்துறைப் பூண்டி கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் நாகூர் இ.எம்.ஜக்காரியா, தலைமைக்கழக இளம் பேச்சாளர் தீன்ஷா நூப் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

திருவாரூர் நகர கழகம் சார்பில் நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் ஐ.பி. கோயில்வீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ, ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் புலிவலம் ஏ. தேவா, பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி, தலைமைக்கழக பேச்சாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், ஜி.வரதராஜன் ஆகியோர் பங்கேற்று பேசினர்.

குடவாசல் வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றியச் செயலாளர் எஸ்.ஜோதிராமன் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் எரவாஞ்சேரி கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர்கள் தங்க.குணசேகரன், தினேஷ் குமார், லிட்டில் மாஸ்டர் தேவதீரன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

நீடாமங்கலம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றியச் செயலாளர் கே.வி.கே.ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கழக சட்டத் திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத் தலைவர் க.தன்ராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் வெ. ராஜமாணிக் கம், கருணாகரன், நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

கூட்டங்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர். நாடு போற்றும் நான்காண்டு கழக அரசின் பொற்கால சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக, தலைமைக்கழக பேச்சாளர்கள், இளம் பேச்சாளர்கள், கழக நிர்வாகிகள் என அனைவரும் சிறப்போடு செயல்பட்டு சாதனைகளை எடுத்துக்கூறினர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியின் சாதனைகளை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும்இது பல்லாண்டு" என்ற சாதனை விளக்க புத்தகத்தை தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரம் 2வது பகுதியில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில், உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் பொதுமக்களிடம் வழங்கினார். உடன் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.அசோக்குமார், பகுதிச் செயலாளர் கல்யாணசுந்தரம், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், சிவானந்தன், எஸ்.இரவிசந்திரன், சார்பு அணி நிர்வாகிகள் டி.ஆர்.அனந்தராமன், எஸ்.முருகன், சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் ஈரோடு மத்திய மாவட்ட கழக மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் மோ.நவீன்குமார் ஏற்பாட்டில் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியத்தில் இல்லந்தோறும் மாணவரணி தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாமை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் தொடங்கி வைத்தார். நிகழ்வில் பவானி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாநில மாணவரணி துணை செயலாளர் ஜெ.வீரமணி, என்.ஆர்.கோவிந்தன், ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சரவணன், பேரூர் செயலாளர் பெரியநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சி. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| | | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் பெருங்களூர் பகுதி தி.மு.க. சார்பில் கோடைக்கால நீர்மோர் பந்தலை மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையேற்று திறந்து வைத்தார். பொதுமக்களுக்கு நீர்மோர், சர்பத் மற்றும் வெள்ளரிக்காய், தர்பூசணி, திராட்சை உள்ளிட்ட பழங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, வி.என்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், ஒன்றிய கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், சரவணன், சி.மணிகண்டன், என்.ராஜலிங்கம், எம்.முனியாண்டி, ஆர்.மணிமாறன், பொன்.செல்வராஜ், ஆர்.இளங்கோவன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சாமிய்யா. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா ஜெய்சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.